Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU தேசிய தினசரி
National TAMIL DAILY

போன்: 389 தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி மாசி 7-ஆம் நாள் றம்ளான் 2. (18 2-61) சனிக்கிழமை இதழ் 7




# மேயர் மீது கண்டனப் பிரேரணை

## நிதி நிலைமை அறிக்கை கிளப்பிய விளைவு

யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாண மாநகர மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா மீது கண்டனப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு அங்கத்தவர்கள் சிலர் முயற்சி செய்வதாக நகரசபையுடன் நெருங்கிய தொடர்புடைய வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அவருடைய நடவடிக்கை சர்வாதிகார முறையைப் போன்றதாக இருக்கிறதென்று நகரசபை அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.**

முன்னாள் மேயர் திரு ஏ. டி. துரையப்பாவின்மீது குற்றச்சாட்டுகள் சுமத்திசமீபத்தில்மேயர் துரைராஜா விடுத்த ஓர் அறிக்கை மாநகர சபை அங்கத்தவர்கள் சிலருக்கு மேயர் மீது அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும், இவர்கள் தான் மேயரின் நடவடிக்கையைக் கண்டிக்கும் பிரேரணையொன்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

"கண்டனத் தீர்மானம் தோல்வியடையுமென்பது எங்களுக்குத் தெரியும். என்றாலும் மேயரின் நடவடிக்கையைக் கண்டிக்கும் பிரேரணையைக் கொண்டுவரவேண்டியது அவசியமென்றே கருதுகிறோம். என ஓர் அங்கத்தவர் கூறினார்.

### மேயரின் சுற்றறிக்கை

நகரசபை உத்தியோகத்தர் எவரும் மாநகரசபை அங்கத்தவருக்கு எவ்வித தகவலும் விபரங்களும் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்றும் விபரங்களைக் கொடுக்கவேண்டியவர்கள் மாநகரசபை ஆணையாளர் மட்டும் தான் என்றும் மாநகரசபையின் சகல இலாக்காத் தலைவர்களுக்கும் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நிரந்தர விதி இல. 145, என்ற தலைப்புடன் இம்மாதம் 11ந் திகதி இச்சுற்றறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"காரியாலய நேரத்திலோ காரியாலயத்திலோ உத்தியோகத்தர் எவரும் தனிப்பட்ட வேலையையோ அல்லது தனிப்பட்ட வேலைகளுக்காக காரியாலயக் கடதாசிகளையோ மாநகர சபை அங்கத்தவர்கள் மாநகர சபையில் சமர்ப்பிப்பதற்கான வேலைகளாயிருந்தாலும் கூட மாநகரசபை உத்தியோகத்தர் எவரும் செய்யக் கூடாது என்றும் மேயர் தமது சுற்றறிக்கையில் கூறியுள்ளார்.

### அறிக்கைக்கு எதிர்ப்பு

"நகரசபை உத்தியோகத்தர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த சுற்றறிக்கை மிகவும் ஒழுங்கற்றது, சட்ட விரோதமானது, அவமானப்படுத்துவது" என்று மாநகரசபை அங்கத்தவரான திரு ஏ ஜி. இராஜசூரியர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார். மாநகரசபை அங்கத்தவர் ஒருவருக்கு மாநகர சபை அலுவல்கள் பற்றித் தெரிந்துகொள்ள உரிமையில்லாவிட்டால் வேறு யாருக்கு உரிமை இருக்கிறது?" என்று

(5-ம் பக்கம் பார்க்க)

# 25000 தொழிலாளர்கள் அடையாள வேலை நிறுத்தம்

கொழும்பு

தொளியோ விட்டையைச் சேர்ந்த சப்புமால் கந்தை தோட்ட நிர்வாகத்தின் போக்கை ஆட்சேபித்து களனி வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 25000 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் (இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும், லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியனையும் சேர்ந்தவர்கள்) கடந்த 15-ம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். சப்புமால்கந்தை தொழிலாளர்களின் கோரிக்கை வருமாறு:-

1. பெயர் கணக்குக்கு மேல் எடுக்கப்படும் அதிகப்படி கொழுந்து ராத்தலுக்கு இதர தோட்டங்களில் கொடுப்பதைப் போல் கட்டணம் கொடுக்கப்பட வேண்டும்.

2. தொழிலாளர்கள், குடியிருக்கும் பகுதிகள் தோறும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாராந்த 'ரேஷன்' கொடுக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் விஷயமாக தோட்ட நிர்வாகம் காட்டிவரும் அலசிய மனப்பான்மையை ஆட்சேபிக்கும் முகமாக 25000 தொழிலாளர் அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர்.

இது சம்பந்தமாக எட்டியாந் தோட்டையில் திரு. கே. ஜி. எஸ். நாயர் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் 10,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். திருவாளர்கள்: எஸ். தொண்டமான், ஏ. அஸீஸ், எஸ். சோமசுந்தரம் ஆகியோர் இக் கூட்டத்தில் பேசினர்.

கொழும்பு சர்வகட்சி அனுதாபக் கூட்டம்

# "சுதந்தர தாகங்கொண்ட மக்களை எந்த சக்தியும் அடக்கி ஒடுக்க முடியாது

டாக்டர் நாகநாதன்

## "கிஸாங்கா அரசாங்கத்தையே அங்கீகரிக்க வேண்டும்"

—பீட்டர் கெனமன்

— டெலிபோன் —

கொழும்பு வெள்ளி

"சுதந்திர தாகம் கொண்ட மக்களை எந்த சக்தியினாலும் அடக்கி ஒடுக்க முடியாது. வெள்ளையராயிருந்தாலும் கறுத்தவராயிருந்தாலும் எநத மொழி பேசுவராயினும் சுதந்தர உணர்ச்சி பிறந்துவிட்டால் அதைத் தடுத்து நிறுத்த முடியாது. இந்த உண்மையைத் தான் காங்கோ உணர்த்துகிறது" என்று கொழும்பு கால் பேஸ் மைதானத்தில் இன்று மாலை நடந்த சர்வ கட்சியினரின் அனுதாபக் கூட்டத்தில் பேசிய டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கூறினார்.

"சுதந்திரத்துக்குப் போராடிய மக்கள் எந்த நசுக்கல் சக்திகளுக்கும் பின்வாங்கக்கூடாது. உயிர்கூட பெரிதல்ல. இந்த உண்மைதான் லுமும்பா உலகத்துக்கு எடுத்துக்காட்டி, உயிர்த்தியாகம் செய்தார்" அவர் மேலும் கூறினார்.

கூட்டத்தில் பிரதமருக்கு பதிலாக மந்திரி மைத்திரிபால செனநாயகா தலைமை வகித்தார். டாக்டர் என். எம். பெரேரா, அனுதாபத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் ஆசியாவில் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் ஆதரிப்போம் ஐ. நா. வுக்கு தூதுவராகச் சென்ற திரு. குணசிங்காவிடமிருந்து பதில் கிடைத்ததும், காங்கோவில் ஜனநாயக அரசாங்கம் எதுவோ அதையே ஆதரிப்போமென்று கூறினார்.

திரு கெனமன் பேசுகையில் லுமும்பா ஆதரவாளரை ஆதரித்தால் மட்டும் போதாது, பெல்ஜியம் கெடுபிடியை ஒழிக்க அவர்களுடைய கப்பல்கள் ஒன்றையும் இங்கு வரவிடப்படாது." என்றார். கிஸாங்காவின் அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திரு. ஏ. அஸீஸ், எஸ். சோமசுந்தரம், டாக்டர் கலீல் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா முதலியோர்களும் பேசினர்

# கடற்படை அதிகாரிகள் மீதுள்ள கடத்தல் குற்றச்சாட்டுகள்

## பொலிஸ் விசாரணை முடிந்தது

கொழும்பு

கடற்படை அதிகாரிகள் சிலர் மீதுள்ள கள்ளக்கடத்தல் குற்றச்சாட்டுகள் சம்பந்தமான தகவல்களை போலிசார் நேற்று அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டனர். இப்பொழுது சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

கடற்படை அதிகாரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி விவாதிக்க ராணுவ நீதிமன்றம் நியமிப்பது,அல்லது கமிஷன் ஒன்று நிறுவதென்பதுபற்றி இன்னும் அரசாங்கம் முடிவு செய்யவில்லையென்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிகூறினார். ஓய்வு பெற்ற நீதிபதியொருவரின் தலைமையில் அமைக்கப்படும் ராணுவ நீதிமன்றத்தால் விசாரணை நடத்தப்படுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ராணுவ அதிகாரிகள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்க ராணுவ நீதிமன்றம் நியமிப்பது பொதுவான வழக்கமாகையால் கடற்படை அதிகாரிகள் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை விசாரிக்க கமிஷன் ஒன்றை நியமிப்பது உசிதமாகுமாவென்பதுபற்றி அரசாங்க உயர்தர அதிகாரிகள் அட்டோர்னி ஜெனரலுடன் ஆலோசனை நடத்திவருவதாகத்தெரிகிறது.

கடற்படை அதிகாரிள்க மீதுள்ள குற்றச்சாட்டுகள் சம்மந்தமாக போலிசார் முன்னூற்றுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து வாக்கு மூலங்களைப்பதிவு செய்திருக்கின்றனர்.

## மார்ச்சு முதல் பஸ் கட்டணம் உயரலாம்

வருகிற மார்ச்சு மாதம் முதல் நீண்டதூர பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டுமென்று பஸ் கட்டண சபையினர் தற்காலிகமாக ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

## நீண்ட பேச்சுக்களை கட்டுப்படுத்தச் சட்டப்

கொழும்பு

பார்லிமென்ட் விதிகளைத் திருத்துவதின்மூலம் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் நிகழ்த்தும் நீண்ட சொற்பொழிவுகளைக் கட்டுப்படுத்துவது பற்றி அரசாங்கம்ஆலோசித்து வருகிறது. இதனபடி ஒரு அங்கத்தவர்கள் 20 நிமிடங்களுக்கு மேல் பேச அனுமதிக்கப்படமாட்டார் என்று தெரிகிறது.

தீர்மானங்களைக் கொண்டு வருபவர்களும அதை அனுவபிப்பவர்களுக்கும் இக் கட்டுப்பாட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமென்றும், சட்டத்தில் திருத்தம் செய்வதற்காக ஒரு தீர்மானத்தை பிரதிநிதிகள் சபையில் சபைமுதல்வர் திரு. சி பி .டி. சில் வா கொண்டு வருவார் என்றும் தெரிகிறது.

## சென்னையில் பூட்டான் மகாராஜா

சென்னை.

பூட்டான் மகாராஜா நேற்று சென்னைவந்து சேர்ந்தார் அவரும் அவரது முதன் மந்திரியும் சென்னையில் 3 நாங்தங்கியிருப்பார்கள். மகாராணி சென்னை வந்து சேர்ந்ததும் அவரை சென்னை முதன்மந்திரி திரு காமராஜ் நாடாரும் கவர்னரும் வரவேற்றனர்.

## வரி விளம்பரம்

### சாதகக் குறிப்பு கண்டெடுக்கப்பட்டுள்ளது

அய்யம்பிள்ளையின் மகன் கதிர்வேலுவின் சாதகக்குறிப்பு (40 ஓலை-ஏடு எழுதியிருப்பது விஸ்வ வருஷம் பங்குனி-16) அல்லப்பிட்டிக்கு சமீபத்திலுள்ள வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதன்உடைமையாளர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளலாம். A. S. ஆசாலத்தேவர், 429, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் தெரிந்த பெண் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு மருத்துவசாலைக்குத் (Nursing Home) தேவை.

யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் மருத்துவசாலைக்கு மருத்துவப் பெண் ஒருவர் தேவை. பெட்டி எண்: 16 C/o ஈழநாடு தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.

தற்காலத்திற்கேற்ற முறையில் குளாய்த்தண்ணீர் வடிகால் முதலிய வசதிகளோடுஅமைந்த வீடு ஒன்று யாழ்ப்பாணத்தில் தேவை. பெட்டி எண்: 17 C/o ஈழநாடு தபாற்பெட்டி எண்: 49 யாழ்ப்பாணம்

அனுபவமுள்ள அச்சுக்கோர்க்கும் (கம்பாஸிட்டர்கள்) தொழிலாளர்களும், சிலின்டர்மெஷின் மைன்டர்களும் தேவை. தினசரிப் பத்திரிகையில் வேலை செய்தவர்களாயிருத்தல் சிறந்தது. நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

மனேஜர், ஈழநாடு, தபாற் பெட்டிஎண்: 49,யாழ்ப்பாணம்.

# "கொண்டாட்டத்திற்கு ஏன் வரவில்லை"

## நிரந்தரக் காரியதரிசிகளிடம் பிரதமர் கேள்வி

கொழும்பு

பெப்ரவரி 4-ந் திகதி கண்டியில் நடைபெற்ற சுதந்திரதின விழாவிலும், சுதந்திரத்தையொட்டி பிரதமர் அளித்த இரவு போஜன வைபவத்திலும் கலந்துகொள்ளத் தவறிய நிரந்தரக் காரியதரிசிகளுக்கு பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயகா சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிருர்.

சிரேஷ்ட அதிகாரிகளிடம் நாட்டுப்பற்று அதிகமாக இருக்கவேண்டுமென்று தாம் எதிர் பார்ப்பதாகவும், முக்கிய விஷயங்களில் அவர்கள் இதர அரசாங்க ஊழியர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டுமென்றும் பிரதமர் தமது நிருபத்தில் கூறியுள்ளார்.

சுதந்திரதின விழாவில் எட்டு நிரந்தரக் காரியதரிசிகளும், மூன்று உபநிரந்தர காரியதரிசிகளும் கலந்து கொள்ளவில்லையென்று தெரிகிறது.

"இம்மாதிரி நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெருதென்று நான் கருதுகின்றேன்," என்று பிரதமர் தமது நிருபத்தில் வலியுறுத்தியிருக்கிருர்.

## இனம் தெரியாத விமானம்

தாய்லாந்தின் எல்லைப் பிரதேசத்தில் ரோந்து புரிந்த 3 விமானங்கள் அப்பிரதேசத்தில் 4 யந்திரங்களைக் கொண்ட இனம்தெரியாத ஒரு விமானத்தை சுட்டு வீழ்த்தின.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள் காலை 7-00,பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 18-2-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவ நற்சிந்தனை 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை 7-30 திரை இசை 8-00 நாகஸ்வரம் பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள் 5-15 இளைஞர் மன்றம் 5-45 திரை இசை * 6-15 பாங்கு 6-30 கிராம சஞ்சிகை இரவு 7-00 இசை மலர் 7-15 லயவின்யாசம் * 7-30 நேயர் கடிதம் * 7-45 பி. சந்திரசேகரம்—பாட்டு 8-15 அறிவுச் சுழல் 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்லாமியகீதங்கள் 10-00 நேயர் விருப்பம்

**ஞாயிறு 19-2-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவ நற்சிந்தனை 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரை இசை 8-00 கிறிஸ்தவ கீதங்கள் 8-30 ஞான அஞ்சலி 9-30 கதம்ப இசை 11-30 சிறுவர் மலர் 12-45 நேயர் விருப்பம் 1-00 மாதர் பகுதி

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள் 5-15 ஏ. சங்கர ஐயர்—வயலின் 5-45 திரை இசை 6-15 பாங்கு 6-30 தாள வாத்தியக் கச்சேரி இரவு 7-00 மாதர் கேட்டவை 7-30 கண்டதும் கேட்டதும் 7-45 பி. சிவபிள்ளை—பாட்டு 8-45 இஸ்லாமிய கீதங்கள் 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

*செங்கடகல உபநிலையத்தில் அஞ்சல்

### திருச்சி

(செய்திகள் காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

**சனி 18-2-61**

காலை 7-30 கே. வி. ஜயராமய்யர்—வயலின் பகல் 1-00 என். வி. கருணலய பாகவதர்—பாட்டு மாலை 4-45 விவித பாரதி(கர்நாடக சங்கீதம்)6-15 கிராம நிகழ்ச்சிகள் இரவு 7-30 'மலரும்முள்ளும்'—நாடகம்8-00 சென்னை அஞ்சல் 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி

**ஞாயிறு 19-2-61**

காலை 7-30 சிங்கா நல்லூர் என்.ராதாகிருஷ்ணன்—பாட்டு 8-15 இஞ்சிக்குடி இ. கே. பிச்சைக்கண்ணு சகோதரர்கள்—நாகஸ்வரம் பகல் 12-00 நீங்கள் கேட்டவை 12-30 சூரியகாந்தி—கதம்ப நிகழ்ச்சி 1-00 மணிமலர் 2-10 பெண்ணுலகம் 2-30 மெல்லிசை 3-10 கல்யாணப்பரிசு—ஒலிச் சித்திரம் மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்)6-15 கிராம நிகழ்ச்சிகள் இரவு 7-30 சிதம்பரம் கே. கோமதி—பாட்டு 9-15 வாத்திய இசை




# தவறு செய்தால் திருத்துங்கள் குறைகூறாதீர்

## தமிழ்ப் பேசும் மக்களுக்கு தமிழரசுத் தலைவர் வேண்டுகோள்

மட்டக்களப்பு

"தமிழரசுக்கட்சியினர் தவறு செய்தால் அதை திருத்த முன்வரும்படி தமிழ்பெருங்குடி மக்களைகேட்டுக்கொள்கிறேன். இந்த அவலமான நேரத்தில் குறைகளைக்கூறிக்கொண்டு ஒதுங்கி நிற்காமல் ஆக்க வேலைகளைச்செய்ய ஊக்ககாயிருக்கவேண்டும்" என்று தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம்,ஈழநாடு நிருபரிடம் தெரிவித்தார்.

திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப் போகும் நேரடி நடவடிக்கை படிப்படியாக அதன் உச்சத்தையடையும் எனவும் அவர் கூறினார். திரு. இராசமாணிக்கம் மேலும் கூறியதாவது:-

என்றுமில்லாத அளவுக்கு தமிழர்களுடைய நிலைமை இன்று மோசமாகிவிட்டது. பேராபத்து நெருங்கிவிட்டதென்றால் கூடமிகையாகாது. பேச்சு ஒப்பந்தம் ஆகியவைகளால் இனி பிரயோசனம் இல்லை. நேரடி நடவடிக்கைதான் பதிலும் மாற்றுமருந்தும்.

ஆபத்தான இந்த நேரத்தில் தமிழ் மக்களிடத்தில் பாகுபாடு இருக்கக்கூடாது. வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு உரிமைப்போராட்டத்தை ஒன்றாக நடத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாம் எடுக்கும் நடவடிக்கைகளில் சிறு சிறு குறைகளிருக்கலாம். அக்குறைகளையெல்லாம் நிவர்த்திசெய்து ஒத்துழைக்கும் பொறுப்பு தமிழ் பேசும் பெருங்குடிமக்களுடையபொறுப்பு. இதை மனதில் வைத்துக் கொண்டு பொதுமக்கள் நேரடி நடவடிக்கைத் திட்டத்தில் சேர்ந்துதமிழைக் காக்க முன் வர வேண்டும்.

### சீனா முற்றாகப் பிடித்துவிட்டது!

புதுடில்லி

லடாக் பகுதியில் சீனா உரிமை கொண்டாடிய பிரதேசம் முழுவதையும் டெம்சக் என்ற சிறு திட்டு நீங்கலாக இப்பொழுது அது கைப்பற்றிக் கொண்டிருப்பதாக அதிகாரபூர்வமாகத் தெரிய வருகிறது.

இந்தப் பகுதியை சீனா 1959-ம் ஆண்டிலா 1960-ம் ஆண்டிலா கைப்பற்றியதென்பதாகத் தெரியவில்லை.

# எம். பி. களுக்கு இலவச பஸ் பிரயாணம்

## மந்திரி சபை முடிவு செய்யும்

கொழும்பு

இலங்கைப்போக்குவரத்துச் சபையின் பஸ்களில் எம்.பி.க்கள் இலவசமாகப்பிரயாணம் செய்ய அனுமதிப்பது பற்றி மந்திரிசபை விரைவில் ஆராயுமென அறியப்படுகிறது

தொழில் தேசியமய சேவை அமைச்சின் ஆலோசனைச்சபைக்கூட்டம் மந்திரி செனட்டர் சாத் விஜயசிங்கா தலைமையில் நடை பெற்றபோது, ரயிலில் எம்.பி.க்கள் பிரயாணம் செய்வதற்கு இப்பொழுது உள்ள வசதிகள்போல பஸ்களிலும் செய்து கொடுக்கப்படவேண்டுமென்ற யோசனைபற்றி விவாதிக்கப்பட்டது.

பஸ்களில் பிரயாணம் செய்வதால் இ.போ.சபை பஸ் சேவைகளில் உள்ள ஒழுங்கீனங்களைக்கண்டு கொள்ளலாமென சில எம்.பி.க்கள் அபிப்பிராயம் தெரிவித்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்விஷயத்தை மந்திரிசபையில் சமர்ப்பித்து முடிவுசெய்வதாக மந்திரி உறுதியளித்தாராம்.

# எலிஸபெத் ராணிக்கு கதரில் செய்த பொன்னாடை

## சென்னை அரசாங்கம் அன்பளிப்பு

சென்னை

எலிஸபெத் ராணி சென்னைக்கு விஜயம் செய்யும்போது சென்னை அரசாங்கம் ஒரு பொன்னாடையை அன்பளிப்பாக வழங்கும் இந்தப் பொன்னாடையை கதர் இலாகாவினர் இதற்கென்றே பிரத்தியேகமாகத் தயாரித்துள்ளனர்.

இது தவிர வெள்ளியினால் செய்யப்பெற்ற ஒரு ஜோடி விளையாட்டுக் குதிரைகள், ஒரு சிறிய வீணை, ஒரு கோட்ஸ்டாண்ட், ஆகியவைகளையும் சென்னை அரசாங்கத்தினர் ராணிக்கு அன்பளிப்பாக வழங்குவர்.

இம் மாதம் 20-ம் திகதி சென்னை நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் குழந்தைகள் அணிவகுப்பின்போது நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் இந்த அன்பளிப்புகளை ராணியிடம் வழங்குவார்.

# சீனத் தந்தத்துக்குப் பதில் கண்டித் தந்தம்?

## அதிகாரிகள் ஆலோசனை

கொழும்பு

புத்தரின் புனித வலது தந்தத்தை இலங்கையில் தரிசனத்துக்கு வைப்பதற்காக அனுப்பும் நவசீனம்பிரபலனுக கண்டியில் உள்ள புனித இடது தந்தத்தை சீனாவில் தரிசனத்திற்கு வைப்பதற்குத்தருமாறு இலங்கையை கேட்குமா?

சீனாவிலிருந்து இலங்கைக்கு வரவிருக்கும் புனித தந்தத்தை வரவேற்றுத்தரிசனத்துக்கு வைப்பதற்கான ஒழுங்குகள் பற்றி ஆராய்வதற்குகூடிய உயர்தர அதிகாரிகள் மேற்கூறிய ஐயத்தைப்பற்றியும் ஆலோசித்தனர்.

சீனாவில் தரிசனத்திற்கு வைப்பதற்கு இலங்கையில் உள்ள புனித தந்தத்தை கேட்டால் இலங்கைக்கு வெளியில் தரிசனத்திற்கு வைக்கக்கொடுக்கும் வழக்கம் இல்லையென்று கூறிவிடுவதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

ஜூன் 10-ம் தேதி சீனாவிலிருந்து புத்தரின் புனிததந்தம் கொழும்புக்குக் கொண்டுவரப்படும்.

கொழும்பு, அநுராதபுரம்' இரத்தினபுரி, பதுளை, மாத்தறை, கண்டி ஆகிய இடங்களில் புனிதப்பல், 10 பவிலகளிக்கு மேல் காட்சிக்கு வைக்கப்படும்.

### வேலையிழந்த நகரசுத்தி தொழிலாளர்

கொழும்பு

கடந்த ஆண்டு இறுதியில் கொழும்பு முனிசிப்பல் சபையிலிருந்து வேலையிழந்த சுமார் 200 நகரசுத்தித் தொழிலாளர்கள் நாளாந்தச் சம்பள அடிப்படையில் வேலை செய்வார்கள்.

இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் கொழும்பு ஜில்லாக் கமிட்டிக் காரிய தரிசி ஈ. சேபாரன் இத் தகவலை அவர்களிடம் தெரிவித்தார். முதலில் 75 பேர் இந்த அடிப்படையில் வேலைக்கு எடுக்கப்படுவார்களென்றும் மிகுதிப் பேர் அதே அடிப்படையில் எடுக்கப்படுவார்களென்றும் அவர் கூறினார். இந் நாட்டின் பிரசைகளல்ல என்ற காரணத்தினால் இத்தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டதாக திரு பாரன் தெரிவித்தார்.

ஆனால் அவர்கள் இந்நாட்டிற் பிறந்தவர்களென்றும், அனைவரும் பிறப்பு அத்தாட்சி பத்திரம்வைத்திருப்பதாகவும், சிலருடைய தகப்பன்மார்கள் கூட இலங்கையிற் பிறந்ததை அவர்கள் நிரூபிக்க முடியுமென்றும் திரு. பரன் கூறினார்.

# ஆக்ரமிக்கப்பட்ட பாடசாலைகளில் சேதம்

## பெற்றோர்கள் பழுது பார்த்துவிட்டனர்

கொழும்பு

பெற்றோரால் ஆக்ரமிக்கப்பட்டிருந்த பாடசாலைகளின் சொந்தக்காரர்களுக்கு, பாடசாலைகளைச் சேதப்படுத்தினால் அதற்குத் தண்டனை விதிக்கப்படுமென்றிருந்த எச்சரிக்கை இப்போது அவசியமில்லாமல் போய்விட்டதென்றும் சேதமடைந்த பாடசாலைகளை பெற்றோர்கள் பழுது பார்த்து விட்டதே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

பெரும்பாலும் சீர்திருத்தப் பட்டுவிட்டதாயும்,சிறியசுத்தப் படுத்தும் வேலைகளே பாக்கியிருப்பதாயும் கல்வி இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

குளியாப்பிட்டியிலுள்ள சகல பாடசாலைகளும் திறக்கப்பட்டும் கூட, அங்குள்ள கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை திறக்கப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது. பாடசாலைக் கட்டிடங்களும், சாமான்களும் அங்கு சேதமடைந்திருப்பதாயும், இதில் வந்திருந்த 500 பிள்ளைகளின் ஆசிரியர்களும், பெற்றோரும் இதுபற்றி கல்வி இலாகாவுக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

### யாழ்ப்பாணத்தில் நாடகப்போட்டி

யாழ்ப்பாணம்

ஜெயசக்தி நாடகமன்றத்தாரின் ஆதரவில் 18 - 2 - 61 சனிக்கிழமை மாலை 6. 30 க்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் 'மன்னிப்பு' 'பாசத்தின் எல்லையிலே' அன்பின் மகிமை! ஆகிய போட்டி நாடகங்கள் நடைபெறும். வேறு கதம்ப நிகழ்ச்சிகளும் ஏற்பாடாகியுள்ளன. இலங்கை வானொலி தமிழ் நாடகப்பகுதி அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தலைமை வகிப்பார்.


கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை

(சாதாரண தரம்)

G. C. E. Ordinary Level

1962 டிசம்பர் — 1964 ஆகஸ்டு

இலக்கிய பாடநூல்

**சுப்பிரமணிய பாரதி பாடல்**

- ★ பாரததேசம்
- ★ சுதந்திரப் பெருமை
- ★ புதுமைப் பெண்
- ★ தமிழ்த் தாய்
- ★ மூன்று காதல்
- ★ நடிப்புச் சுதேசிகள்
- ★ சுதந்திரத் தேவியின் துதி
- ★ தொழில்
- ★ தமிழ்
- ★ வெண்ணிலாவே
- ★ முரசு

மாணவர்கள் எளிதில் படிக்கக்கூடிய முறையில் அரும்பதவுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

வியாபாரிகளுக்கு 20% கமிஷன்

இன்றே உங்கள் ஆடர்களை அனுப்பிவையுங்கள்.

விலை சதம் 75

**விவேகானந்த அச்சகம் - புத்தகசாலை**

விவேகானந்தாக் கட்டிடம்

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 517 (தொடர்புகள் 3) தந்தி: பிறின்ரேஸ்


சர்க்கரை சூடம் இறக்குமதித் தடை

# கஷ்டத்தை நீக்க ஆவன செய்வதாக மந்திரி வாக்குறுதி

யாழ்ப்பணம்.

சர்க்கரைக்கும் சூடத்துக்கும் விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடைசம்பந்தமாகபொது மக்களுக்கு குறிப்பாக இந்துப் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைக் குறைப்பதற்குத் தாம் ஆவனசெய்வதாக உணவுமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின தம்மைச் சந்தித்த தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் யாழ்ப்பாணவர்த்தகர்கள் சிலர் உணவு மந்திரியைச் சந்தித்தனர்.

பொதுமக்களுக்குற்ற கஷ்டங்களையும் வியாபாரிகளுக்குற்ற சங்கடங்களையும் கேட்டறிந்த உணவுமந்திரி இதுசம்பந்தமாக ஆவனசெய்வதாகத் தெரிவித்தார்.

மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்லும் வர்த்தக தூதுகோஷ்டியொன்றுக்குத் தலைமைதாங்கிச் செல்லும் உணவுமந்திரி தாம் வெளிநாடு செல்ல விருப்பதால் உடனடியாக நடவடிக்கை எடுப்பது கஷ்டமென்றும் பொதுமக்களின் கஷ்டத்தைச் சிறிது தளர்த்தக்கூடிய நடவடிக்கைகளைக் கையாளும்படி தனது அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுச் செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

### யாழ்ப்பாணத்திற்கு நல்லஅரிசி

யாழ்ப்பாணத்திற்கு மோசமான அரிசி அனுப்பப் படுவதாகவும் இந்த அரிசியை நிறுத்தி நல்ல அரிசியை குறிப்பாக ரமழான் மாதத்திலாவது நல்ல அரிசியை அனுப்ப வேண்டுமென்று திரு துரையப்பா மந்திரியைக் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்திற்கு இனிமேல் மோசமான அரிசி அனுப்பப்படாமல் பார்த்துக் கொள்வதாக மந்திரி உறுதி கூறினாராம்.

### சமயத்தொண்டர்களுக்கு பாராட்டு விழா

கல்லடி உப்போடை

"இந்த விழாவிலே சைவப் புலவர் த. கிருஷ்ணபிள்ளையை சமயத் தொண்டன் வீ. வேலுப்பிள்ளையையும் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதில் நான் பெருமை அடைகின்றேன். அடுத்த ஆண்டு இதே மேடையில் சமயத் தொண்டு புரிய முன்வந்து சேவை செய்த புலவரைக் கௌரவப்படுத்த வேண்டுமென்பதே எமது பேரவா. இவ்விருவரது சேவை மென்மேலும் வளர வேண்டுமென இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்." இவ்வாறு மட்டக்களப்பு அருள்நெறித் திருக்கூட்டத்தினரால் கல்லடி உப்போடையில் நடைபெற்ற பாராட்டு விழாவுக்குத் தலைமை தாங்கிய சுவாமி நடராஜானந்தா தமது உரையிற் குறிப்பிட்டார்.

## மணிவாக்கு

'நீ இல்லாமற் பிறர் வாழ முடியாது என எண்ணுவது எவ்வளவு தவறோ, அவ்வாறே பிறர் இல்லாமல் நீ வாழ முடியும் என்ற எண்ணமும் தவறாகும்.

—ஓர் அறிஞன்

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு மாசி மீ 7 உ (18-2-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna, Phone: 389.

## இலங்கை-இந்தியா போக்கு வரத்து

சீதையைத் தேடிக்கொண்டு அனுமார் இலங்கைக்குக் கடல் தாண்டி வந்தாராம். அக்காலத்தில் விஸா சங்கடங்கள் இல்லை. ஆனல் அதற்குப்பதில் இலங்கிணி எனும் ரட்சாஸி இலங்காபுரிவாயிலில் இருந்து மேலே பறந்து வருபவர்களை நிழலால் பிடித்து இழுத்து விழுங்கி விடுவாளென்றும் அவளை அனுமான் தீர்த்துக் கட்டியதாயும் கதை.

இக்காலத்தில் அவ்வித சக்தியுள்ள ரட்சாஸி இல்லை. இதற்குப் பதில் 'விஸா' காரியாலயங்கள் உள்ளன. வெளிநாடுகளிலிருந்தும் சிறப்பாக இந்தியாவிலிருந்தும் இங்கு யாத்திரிகர் சுலபமாக வந்து விடாமல் வேண்டுமானவற்றை அக் காரியாலய அதிகாரிகள் செய்து வருவதாக நமக்குப் பல பல புகார்களுண்டு.

அதில் திருச்சியிலுள்ள இலங்கை விஸா காரியாலயம் மிகவும் 'புகழ்' வாய்ந்தது. அந்தக் காரியாலயத்துக்கு இலங்கை அரசாங்க குமாஸ்தா ஒருவர்தான் அதிகாரி. உடன் விஸா வழங்க அவருக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஆகவே விஸா மனுக்களை அவர் இலங்கைக்கு அனுப்புவார். இங்கிருந்து பதில் போக மாதக்கணக்கிலாகும். அல்லது பதிலே போகாமலிருக்கலாம். இலங்கைக்கு யாத்திரையாகவும் வேறு காரணங்களுக்காகவும், இங்கு வரவேண்டியவர்கள் விஸாவுக்காக பணச் செலவு செய்து பன்முறை திருச்சி வந்து ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். தினசரி அங்கு ஏமாற்றமடைந்தவரின் கஷ்டம் அதிகரித்தது. ஒரு முறை அந்த குமஸ்தாவுக்குத் தடியாராதனையும் கிடைத்ததாம். பாவம்!

இந்தப் புகார்களைப்பற்றி விசாரிக்கவும், திருச்சியில் விஸாகாரியாலயத்தை சீர்திருத்தி அமைக்கவும் இலங்கை வெளிநாட்டு இலாகா முன் வந்திருப்பதாயும் குமாஸ்தாவுக்கு பதில், இங்கிருந்து ஓர் அதிகாரியே அனுப்பப் படுவதாயும் தெரிகிறது. அதிகாரி தாமே உடனுக்குடன் விஸா மனுக்கள் மீது உத்தரவிடலாலாயாதலால் இனி இதுபற்றிய வீண் சுணக்கம் இராதென்று எதிர்பார்க்கலாம். இவ்வளவு தாமதித்தாவது இலங்கை அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க முன்வந்தது வரவேற்கத்தக்கதாகும்.

"யாத்திரிகர்களே! எங்கள் இலங்கைக்கு வந்து பாருங்கள்' என்று ஒரு பக்கம் பணச் செலவு செய்து பிரசாரம் செய்கிறோம். அதிகமான யாத்திரிகர் வருவதால் இலங்கைக்கு வருமானம் அதிகம். இந்த வருமானம் சமீபத்தில் குறைந்து விட்டதாக யாத்திரிகர் இலாகா மீதுகுற்றமும் சுமத்தப்படுகின்றது ஆனல் மறுபக்கம் அரசாங்கமே விஸா செலவாணி பல பல தடைகளைப் போட்டு யாத்திரிகர் இங்கு சுலபமாக வர முடியாதபடி தடுக்கின்றது. உதாரணமாக விமான மார்க்கமாக இந்தியாவுக்கு ஒருவர் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையே (தமது செலவில்) செல்லலாமென்பது உத்தரவு. கொழும்பிலிருந்து சென்னைக்கு முதல் வகுப்பு ரயில் கட்டணமும், விமானக்கட்டமும் அநேகமாக ஒன்றுதான். ரயில் பிரயாணத்துக்குக் கட்டுப்பாடு இல்லாதிருக்கையில், ஏன் விமான யாத்திரிகைக்கு மட்டும் இந்தத் தடை விதிக்கவேண்டுமென்பது விளங்கவில்லை. இந்ததடையில்லாவிடில், இலங்கை விமான சர்விஸுக்கு அதிக வருமானமும் கிடைக்கக் கூடும். நமது சில அரசாங்க பிரகஸ்வாதிகளின் போக்குசிதம்பரசக்கரமாகவேயிருக்கின்றது. பொதுமக்களுக்கு கூடுமான உபத்திரவம் செய்யவே இந்த "ஊழியர்கள்" இருந்துவருகிறார்கள் போலும்.

இந்தியா இவ்விஷயமாக சற்றே தாராளமாக இருந்தது. இலங்கையர் சார்பாக இந்தியாவில் யாரும் பணம் கட்டி விமான டிக்கெட் எடுப்பதை அனுமதித்துவந்தது. ஆனல் இப்போது இந்தியரல்லாதார் யாருக்காகவும் விமான டிக்கெட் எடுக்க அங்கும் அனுமதிக்க முடியாதென்று உத்தரவு போட்டுவிட்டனராம். இரு அரசாங்கங்களும் போட்டி போட்டுக்கொண்டு ஏன் இரு தேசப் பொதுமக்களையும் இப்படி இம்சைசெய்யவேண்டுமோ தெரியவில்லை, இருதேச நல்லுறவையும் பலப்படுத்த வேண்டுமென்று இருதேசப் பிரதமர்களும் கூறுகிறார்கள். இருதேச பொதுமக்களும் தாராளமாகப் போய்வர வசதி இல்லாமற் தடுத்தால் எப்படி நல்லுறவு பலப்படும்?

அடிமை ஆட்சியில் இரு நாட்டவர்க்கும் இருந்த போக்கு வரத்துஉரிமை, இப்போது பெரிதும் குறைந்துவிட்டது. சுதந்திரம் பெற்றதன் பலன் இதுதானு? இவ்வித தடைகளை நீக்கி, இலங்கை இந்தியா போக்குவரத்து தாராளமாக நடத்த அனுமதிக்க வேண்டும். இதனல், இரு தேச நல்லுறவு பொதுமக்களிடையே வளர்வதுடன், பரஸ்பரம் பலவிதங்களிலும் இரு நாடுகளுக்குமே நன்மையுண்டாகும்.

# ஒரே மேடையில் இலங்கையின் சர்வ கட்சிகளின் கூட்டம்

## நேரடி நடவடிக்கை: மீண்டும் கலவரமா? நம்பிக்கையில்லாத் தீர்மானம்

— நமது அரசியல் நிருபர் —

இலங்கையின் அரசியல் அரங்கிலே இதுவரை இல்லாத ஒரு வரவேற்கத்தக்க புதுமையை இப்போது காண்கிறோம். தங்களிடையே என்ன வேற்றுமைகளிருப்பினும் இங்குள்ள எல்லாக் கட்சிகளும் சேர்ந்து இரண்டுவாரங்களுக்கு முன் கால்பேஸ் மைதானத்தில் ஒரே மேடையில் கூடி, சுதந்திர அல்ஜீரிய பிரதமர் அப்பாஸை வரவேற்றதுடன் அல்ஜீரிய சுதந்திரத்தை ஆதரித்தும் பேசி, தீர்மானங்கள் நிறைவேற்றினர். யூ. என். பி. தலைவர் டட்லி சேனநாயக்கா கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் பீட்டர் கெனமனும் ஒரே மேடையில் ஒரே கருத்துக் கொண்டு பேசியிருந்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமையும் காங்கோ விஷயமாக கால்பேஸ் மைதானத்தில் சர்வ கட்சிக் கண்டனக் கூட்டம் நடைபெற்றுள்ளது. பிரதம மந்திரியின் சார்பிலே மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்துள்ளார். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் நாகநாதன் சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமன் யூ. என். பி. கட்சியைச் சேர்ந்த டாக்டர் கலீல், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் எஸ். சோமசுந்தரம், இவர்களனைவரும் மீண்டும் ஒரே மேடையில் கூடிப் பேசியது, நல்லதோர் அறிகுறியாகும்.

இவ்விரு கூட்டங்களும் ஆபிரிக்க மக்களின் அரசியல்சுதந்திரத்தைப் பற்றியது. ஆபிரிக்கமக்கள் காரணமாக இங்கு எல்லாக் கட்சிகளும் ஒற்றுமையாக ஒரே மேடையில் கூடிப் பேசியிருக்கையில் இலங்கை மொழிப்பிரச்னை போன்ற பல நெருக்கடியான விஷயங்களைப் பற்றிப் பேச ஏன் எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடக்கூடாது? இந்த ஒற்றுமை ஆபிரிக்கா முதலிய வெளிநாட்டு விஷயங்களுக்கு மட்டும்தானு? உள்நாட்டில் ஏற்பட்டுள்ள மொழி முதலிய பல நெருக்கடியான விஷயங்களைப்பற்றியும் கலந்து பேசி சுமுகமான முடிவைச் செய்ய எல்லாக் கட்சியினரும் சேர்ந்து கூடி யோசிக்கப்படாதா? வெளிநாட்டு விவகாரங்களைவிட உள்நாட்டு விஷயங்கள் முக்கியமல்லவா?

மேற்குறித்த இரு கூட்டங்களிலும் எல்லாக் கட்சி தலைவர்களும் சேர்ந்து ஒரே மேடையிற் கூடியது, ஒற்றுமைக்கான ஒரு புதிய நம்பிக்கையைத் தருவதாக உள்ளது இக்கட்சிகளெல்லாம் ஒன்று சேர்த்த நன்முயற்சி செய்தவர்களே, உள்நாட்டு விஷயமாகவும் சிறப்பாக மொழி விஷயத்திலும் ஒரு சமரம் ஏற்படுத்த முயற்சி எடுக்கவேண் வேண்டும் இது தேசாபிமானிகளின் மேலான கடமையுமாகும். ஆனல் தேர்தல்கள் ...!

### நேரடி நடவடிக்கை

இதற்கிடையே தமிழரசுக் கட்சியினர் நேரடி நடவடிக்கையை வருகிற திங்கட்கிழமை நடத்த முனைந்து தொண்டர்களைச் சேர்த்து வருகிறார்கள் பெண் தொண்டர்கள் சேர்ந்துள்ளதால் அரசாங்கமும் பெண் போலிசாரை வடமாகாணம், கிழக்குமாகாணம் இவ்விரண்டுக்கும் அனுப்பியுள்ளது. "மொழிக்காக நடக்கும் இறுதிப் போராட்டம் இது" என்று அக்கட்சி துண்டுப்பிரசுரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் போராட்டத்தால் 1958 ம் வருஷம் நடந்தது போல் ஏதும் கலவரங்கள் ஏற்படுமோ என்று ஒரு எம். பியை விசாரித்தேன். அப்படி எதுவும் ஏற்படாதென்றும், அதற்கு அரசாங்கம் இடமளிக்காதென்றும் அவர் தெரிவித்தார்.

சென்றமுறை நடந்த கலகங்களில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களில் சிலரே பங்கு பற்றியதாயும், அதனலேயே பெரிய விபரீதங்கள் விளைந்ததாயும், இப்போது, அரசாங்கக்கட்சியினர் வகுப்புக் கலவரங்களுக்கு ஆதரவு அளிக்காததால், கலவரங்கள் தலைதூக்க இடமிராதென்றும், எங்காவது ஏதும் ஏற்பட்டால் அது உடன் அடக்கப்பட்டு விடலாமென்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கொழும்பு பெரிய தபால் கந்தோருக்கு அன்பர் ஒருவர் சென்றார். அங்குள்ள ஒரு தமிழ் அதிகாரி அவரைக் கண்டு, கதைக்கையில், புத்தளம் சிலாபம் இவ்விடங்களிலிருந்து இஸ்லாமிய தமிழரும் மலைநாட்டுத் தமிழரும்தான் தமிழில் விலாசமிட்ட கடிதங்களை எழுதுகிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வரும் கடிதங்களெல்லாம் ஆங்கிலத்தில்தான் விலாசமிட்டுள்ளன..." என்று குறைசொன்னாராம்.

யாழ்ப்பாணத்திலே தெருவழியே நடந்து சென்றேன். "தமிழா உன் கடிதங்களை தமிழில் எழுது" என்று சுவரொட்டி விளம்பரங்களைப் பார்த்தேன். தமிழ் மொழிக்காக உயிர்ப்போராட்டம் நடக்கும் சமயமிது. இச்சமயத்தில் கூட தமிழில் பேச, தமிழில் எழுத வேண்டாமா?

ஆனல் வெகு கால பழக்கம் ஆங்கிலம் படித்த தமிழர் கூடினல் ஆங்கிலந்தான் "இயற்கையாக"ப் பேசுகிறோம். தமிழில்தான் தமிழர் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள வேண்டுமென்றும் புதுத் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்.

⁂ ⁂ ⁂

ஆங்கிலத்தின் மீதோ அன்றி வேறு எந்த மொழி மீதோ துவேஷமில்லை. உலகத்து எல்லா மொழிகளையும் நாம் கற்க முயலவேண்டியதே. அதிக மொழிகள் ஒருவருக்குத் தெரியத் தெரிய, அவருடைய உலகம் விரிந்துகொண்டு போகிறது.

வேண்டுமானல் வீட்டுக்குள் ஆங்கிலம் பேசிக்கொள்வோம். வெளியிலேயாவது தமிழர் ஒருவருக்கொருவர் தமிழிலேயே பேசினல்தான், மற்றவர்களும் நம்மையும் நமது மொழியையும் மதிப்பார்கள். இச்சமயம் தமிழர் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள தமிழில்தான் பேச வேண்டும்.

இதற்கு நமது எம். பி.க்கள் வழிகாட்டினல் நல்லது. ஆனல் அவர்கள் பார்லிமெண்டிலே ஆங்கிலத்தில்தானே பேசுகிறார்கள்!

பார்லிமெண்டில் தமிழ்ப் பேச்சுகள் ஒருசில நிமிடங்களே நடந்துள்ளதாக ஒரு கணக்காக இரண்டொரு நாட்களுக்குமுன் பார்த்தேன், வெட்கமாக இருந்தது! என்ன செய்வது?

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவர் எழுதுவதாவது:- யாழ்ப்பாண வாசியான ஓர் அன்பர் வரிப்பணம் கட்ட மாநகர சபைக்குச் சென்றார். குமாஸ்தாவிடம் தாம் செலுத்த வேண்டிய தொகை, கந்தாயம் மாதம் இவற்றைக் கேட்டார். அவரும் ஆங்கிலத்தில் பொழிந்துதள்ளினர்.

அன்பருக்கோ விஷயம் புரியவில்லை. தம்பி கொஞ்சம் தமிழில் சொல்லுங்கோ" என்றதும் குமாஸ்தாவுக்குக் கோபம் பொங்கிவிட்டது. பற்றுச்சீட்டை எடுத்தார். ஆங்கிலத்தில் வரைந்துதள்ளினர்.

"இந்தாப்பா இதுவும் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது

(5-ம் பக்கம் பார்க்க)

## இரத்தினக் கம்பளம்

பதுமன்

மயில் ஆடும், குயில் கூவும், ஆந்தை அலறும் என்று பாலர் வகுப்பில் படித்ததை யார்தான் மறப்பார்கள் வளர்ந்த பின்னர் எங்களில் அநேகர் மயில் போல் ஆடியும் குயில் போலக் கூவியும், ஆந்தை போல் அலறிக் கொண்டிருப்பதைக் காணும் பள்ளிக்கூடத்திற் படித்த சில பாடங்கள் நினைவுக்கு வருவது இயல்புதானே!

இந்தியாவின் தேசியப் பறவையாக வண்ண மயில் தெரிந்தெடுக்கப்பட்டதைப் பத்திரிகையிற் படித்த போதுதான் மயில், குயில், ஆந்தை, கூவை போன்ற பறவை இனங்களின் எண்ணம் மனதில் சிறகடித்தது.

ஒரு நாட்டுக்குத் தேசியக் கீதம், தேசியச்சின்னம், தேசிய உடை என்பவை மிக அவசியமானவை. அதுவும் சுதந்திர நாடுகளுக்கு இச் சின்னங்கள் இருந்தே ஆகவேண்டுமென்பது மரபாகிவிட்டது, அத்துடன் மயில் போன்ற சில பறவைகள் கருகிப் போகாமல் இருப்பதற்கும் இது ஒரு வகையில்வழி செய்கின்றது என்பது பதுமனின் அபிப்பிராயம்.

### இலங்கைப் பறவை

இந்தியா தோகை மயிலைத் தேசியப் பறவையாகத் தெரிந்தெடுத்திருப்பதால் இலங்கையும் ஏதாவது ஒரு பறவையைத் தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்ககூடும் என எண்ணுவதில் தவறு எதுவுமில்லை.

தேசிய கீதத்தையே மாற்றியமைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்குத் தேசியப் பறவைமீதும் நாட்டம் ஏற்படக் கூடும். அப்படியானல் இலங்கைக்கு ஏற்ற தேசியப்பறவை காகம்தான் என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று யோசனை கூறியிருக்கின்றது.

அங்கிங்கெனதபடி எங்கும் பறந்துதிரியும் காக்கைக்கு எத்தித்திருடும் குணம் இருக்கின்றதாயினும் அதன் மீது இரக்கப்படவேண்டுமெனப் பாரதியார் குழந்தைகளுக்கு இனியதமிழில் பாடியிருக்கின்றார். அதே பாரதியார் காக்கை குருவி எங்கள் ஜாதி என்றும் பாடியிருக்கிறார்

### நாமும் காகமும்

இப்படி இலங்கையைக் காகத்துடன் இணைக்கும்போது இங்குள்ளவர்களுக்கும் எத்தித்திருடும் குணம் இருக்கக்கூடுமெனஎவரும் எண்ணவேண்டியதில்லை. இலங்கை ஓர் அப்பாவி நாடு. சுதந்திரம் கூட அதற்குச் 'சும்மா' இருக்கக்கிடைத்தது. கண்ணினும் இனிய சுதந்திரத்தின் அருமை பெருமையை மக்கள் அறியாத காரணத்தினலே தான் பிறருடைய உரிமைகளில் நாங்களில் கைவைக்கின்றோம். சிங்களத்தைத் தமிழினத்தின் மீது திணிக்கவும் முற்பட்டு நாட்டில் குரோதத்தை உண்டு பண்ணியிருக்கின்றோம். இந்த மொழிப் பிரச்சினையைத் தொடர்ந்து நாட்டிலே கறுப்புக் கொடிகள் பறக்க அரம்பித்திருப்பதால் 'காகம்' இலங்கையின் தேசியப்பறவையாக விளங்கிக் கரைவதை ஏன் வரவேற்கக்கூடாது.

# 3000 இளைஞர்களுக்கு ஆசிரியர் வேலை

கொழும்பு

எஸ். எஸ். ஸி. சித்திபெற்ற மூவாயிரம் மாணவர்களுக்கு கல்விப் பகுதி உடனடியாக ஆசிரிய வேலை கொடுக்குமென்று கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மாமூத் அறிவித்தார்.

ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து கோட்டா முறையில் இவர்கள் தெரிவு செய்யப்படுபடுவார்களென்றும் ஒரு தொகுதிக்கு இருபது பேர் வீதம் 151 தொகுதியிலிருந்தும் இவர்கள் தெரிவு செய்யப்படுவார்களென கல்வி மந்திரி கூறினார்.

எஸ். எஸ். ஸி. சித்தி பெற்றவர்கள் அந்தந்த மாகாணத்தில் உள்ள வித்தியாதரிசிகளின் காரியாலத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்யும்படி ஒரு மாதத்திற்கு முன்னர் அறிவிக்கப்பட்டது.

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எஸ். எஸ். ஸி. சித்தி பெற்றவர்கள நான்கு பாடங்களில் விசேஷ (கிரடிட்) சித்திபெற்றவர்கள், ஆசிரியத் தொழிலில் அனுபவமுள்ளவர்கள் ஆகியவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுமாம்.

இதன்பின்னர்தான் சாதாரண எஸ். எஸ். ஸி சித்தி பெற்றவர்கள் தெரிவுசெய்யப் படுவார்கள்.

"ஆசிரியர் வேலைக்கு மனுப் பண்ணுபவர்கள் எம் பிக்களுடைய சிபார்சுகளுடன் வர வேண்டாம். என்னையோ கல்விப் பகுதி அதிகாரிகளையோ சந்திக்கவும் முயற்சி செய்யக் கூடாது.

# மட்டக்களப்புக்கு 'ஸ்ரீ' பஸ்கள் வேண்டுமாம்

மட்டக்களப்பு

மட்டக்களப்புக்குப் புதிய 'ஸ்ரீ' பஸ் வண்டிகளை அனுப்பும்படி, இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதி திரு. கே. வி. கிருஷ்ணகுட்டி தலைமையில் சென்ற ஒரு தூது கோஷ்டி போக்குவரத்து மந்திரியின் பார்லிமெண்ட் டரிக் காரியதரிசியையும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஜெனரல் மனேஜரையும் கேட்டுக் கொண்டது.

இப்பொழுது மட்டக்களப்பில் பல ஸ்ரீ பஸ்கள் சேவை செய்து வருவதாகத் தெரிவித்த திரு. கிருஷ்ணக்குட்டி பழைய பாடாவாரி பஸ்களை அகற்றிவிட்டுப் புதிய பஸ்களை சேவைக்கு விட வேண்டியது மிக அவசியமென்றார். பழைய 'லொடலொட்டை' பஸ்களைப் பழுது பார்ப்பதாலேயே போக்குவரத்துச் சபைக்கு நஷ்டம் ஏற்படுகிறதென்றும் அவர் கூறினர்.

## 25 தொழிலாளர் வேலைநிறுத்தம்

கொழும்பு

மடுல் கொல்லையைச் சேர்ந்த கலபொக்கை தோட்டத்தில் 2500 தொழிலாளர்கள், தங்கள் பிரச்சினைகள் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக முதலாளிமார்களால் தீர்க்கப்படாமலிருப்பதனலும், இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த தோட்டநிர்வாகம் இணங்காததை முன்னிட்டும் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. இத் தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அங்கத்தினராவர்.

## புதிய கிராமச்சங்கத் தலைவர்

மண்முனை வடகிழக்கு தென் பகுதி (ஆரப்பற்றை) கிராமச் சங்கத் தலைவராக திரு. கே. சாமித்தம்பி தெரிவுசெய்யப் பெற்றார்.

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:

ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்

## படகு விபத்தில் 35 பேர் பலி

ஹைதராபாத்

விசாகப் பட்டணம் ஜில்லாவில் சிந்திப்பூட்டு கிராமத்திற்கப்பால் மச்சக் குண்டு ஆற்றில் படகொன்று மூழ்கியதின் காரணமாய் 35 பேர் மாண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. இதுவரை போலிசார் 14 உடல்களை மீட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## இரு டகோடா விமானங்கள் பழுது

கொழும்பு

ஏயர்சிலோனுக்குச் சொந்தமான இரண்டு டகோடா விமானங்கள் பழுதடைந்துள்ளன வென்றும் ஒன்று மட்டுமே பிரதேச, உள்நாட்டு சேவைக்கு உபயோகிக்கப்படுகிறது.

குறித்த இருவிமானங்களும் பூரணமாகப் பழுதுபார்க்க வேண்டியிருப்பதால் இன்றும் ஒருமாதத்திற்கு அவைகளை உபயோகிக்க முடியாதெனத் தெரியவருகிறது.

## எம். பி.யின் எச்சரிக்கை

தெல்தெனியா

"கல்வி மந்திரியும் அவரது அரசாங்கமும் மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதிகள் அரசியல் வாதிகள் அடிக்கும் தம்பட்டம் போல் நடைமுறைக்கு வராதுவிட்டால் மக்கள் சாபம் போடுவார்கள்" என்று தெல்தெனியா எம். பி. திரு. திஸ்ஸாகப்புக்கொட்டுவா ஒரு கூட்டத்தில் பேசுகையில் கல்வி மந்திரியை எச்சரித்தார்.

## உருக்கு உற்பத்தி

புதுடில்லி

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் இந்தியா, வருஷம் ஒன்றுக்கு 100 இலட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்யுமென அறிவிக்கப்பட்டது.

# இ.போ.ச. 1961-ம் ஆண்டில் ரூ. 2-70 கோடி நஷ்டம்

கொழும்பு

1961-ம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சுமார் ரூ 2,70,00,000 ஆகுமென உத்தேச மதிப்பீடு கூறுகிறது.

1959-ம் ஆண்டில் ரூ 1 கோடி 30 லட்சத்துக்குமேல் நஷ்டம் ஏற்பட்டது. 1960-ல் இத் தொகையைவிடக் குறைந்தநஷ்டம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் நடப்பு வருட நஷ்டம் 1959-ம் ஆண்டு நஷ்டத்தைவிட இரட்டிப்பாகலாமென்றும் சாமான்களின் விலை ஏற்றம் நிர்வாகச்செலவு அதிகரிப்பு, சம்பள உயர்வு போன்ற காரணங்களினல் தான் இவ்வளவு அதிகநஷ்டம் ஏற்படுமென எதிர்பார்க்கப் படுவதாயும் தெரியவருகிறது. இறக்குமதிக்கட்டண அதிகரிப்பின் காரணமாக சாமாகளுக்கு மட்டும் 75 லட்சம் ரூபாய் அதிகமாகப் பிடிக்கும் என உத்தியோக வட்டாரங்கள் கூறின.

## ஐயாறன்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்த ஆளிடம் கொடுத்து வாசித்துப்பார் என்றார்.

அச்சமயம் நானும் அங்கு சென்று கொஞ்சம் தமிழில் எழுதினல் நல்லதல்லவா என்றேன். "எனக்குத் தமிழ் எழுதவராது" என்றார். இதாவது தமிழில் சொன்னீர்களே'! என்றேன். வந்தது கோபம்.

"யு. மைண்ட் யுவர் பிஸினஸ்" (உம்முடைய வேலையைப் பாரும்) என்றார். இப்படிப் போகிறது அங்குள்ள தர்பார் தமிழ் எப்படி எப்போது தலைத்தூக்குமோ."

ஆங்கிலத்தில் எழுதிய பல கால பழக்கம். அது மாறுவது கஷ்டம். "வி மஸ்ட் ஆல் டாக் இன் டாமில்!" என்றார். பக்கத்திலிருந்த என் நண்பர்!

ஃ ஃ ஃ

'ரேடியோ லைசன்ஸ்' பத்திரம் முதலில் வழங்கும்போது தமிழிலும் இருக்கிறதாம். பன்னர் அதைப் புதுப்பிக்கும் போது சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே யுள்ளதாம்.

படிப்படியாக தமிழ் எப்படி ஒதுக்கப்படுகிறது பார்த்தீர்களா? இவ்வித சமயத்தில் நாமே தமிழை ஒதுக்கலாமா?

## உடுவில் கிராமச் சங்கத்தலைவர் எம். பி. தெரிவு

சுன்னகம்

உடுவில் கிராமச்சங்கத் தலைவராக உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தெரிவு செய்யப் பெற்றார்.

திரு. ஏ. நடராஜா உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## வீடமைப்புக் கடன் மனுப்பத்திரம் மோசடி நடைபெறுகிறதாம்

அக்கரைப்பற்று

வீடு கட்டுவதற்கு தேசிய வீடமைப்புக் கமிஷனரிடமிருந்து பெறும் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைந்த கடன் மனுப் பத்திரம் கச்சேரியிலோ, ஸ்தலஸ்தாபன உதவிக்கமிஷனர் காரியாலயத்திலேயோ இப்பொழுது பெறமுடியாதுள்ளது. சிலர் இக்கடன் மனுப் பத்திரத்தை 5ரூபாய்க்கு விற்பதாகவும், மற்றும் சிலர் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் உள்ள இப்பத்திரத்தை நிரப்புவதற்கு 5ரூபாய் வீதம் வாங்குவதாகவும் குற்றம் சாட்டப் படுகிறது.

## மேயர் மீது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராஜசூரியர் கேட்டுள்ளார். 'ஏராளமான புகார்கள் எனக்குக் கிடைத்துள்ளன. எனவே இவைபற்றி 'ஒருகண்' வைத்திருக்கவேண்டியது எங்கள் கடமை'

'இந்தசுற்றறிக்கையை மேயர் வாபஸ் பெறவேண்டும். இந்தச் சுற்றறிக்கைக்கு இதர அங்கத்தவர்களும் எதிர்ப்புத் தெரிவிப்பார்களென்றும் நம்புகிறேன்' ' என்றார்.

### திரு துரைராஜசிங்கம்

மாநகரசபையில் சமசமாஜக் கட்சி அங்கத்தவர்களுள் ஒருவராகிய திரு. ஏ. துரைராஜசிங்கம் 'ஈழநாடு' நிருபரிடம் கூறியதாவது:

முன்னுள் மேயருக்கு எதிராக மேயர் விடுத்த அறிக்கையைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவைகள் உண்மையல்ல. அந்த அறிக்கையில் முன்னுள் மேயர் மீது தெரிவிக்கப்பட்டவற்றைவிட பழைய சபை மீதுதான் அதிக குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கணக்குப் பரிசோதகருடைய அங்கீகாரத்தையோ கணக்காளருடைய அங்கீகாரத்தையோ பெறவில்லையென்பதில் ஐயமில்லை. தனிப்பட்ட குரோதங்களைத் தீர்த்துக் கொள்ள மேயர் முயற்சி செய்கிறார் என்பது தெளிவு.

# சர்வ கட்சிகளின் கூட்டம்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் அந்த எம். பி. தெரிவித்தார்.

### நம்பிக்கையில்லாத் தீர்மானம்

வருகிற 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்கத்தின் மீது கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை லங்கா சமசமாஜ கட்சியும் ஆதரிக்க முன்வந்துள்ளது, குறிப்பிடத்தக்கது எதிர்க் கட்சிகளெல்லாம் இப்பிரேரணையை ஆதரிக்கின்றன. கைலஞ்சக் குற்றவாளிகளின் அரசியல் உரிமை பறிக்கப்பட வேண்டுமென்றும், சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய அனுமதிக்கும் மசோதா, விசாரணைக் கமிஷன் தீர்ப்பை அலட்சியப்படுத்துவதாகுமென்பது எதிர்க் கட்சியினர் கூறுகின்றனர்.

எதிர்க் கட்சிகளெல்லாம் சேர்ந்தாலும் இத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாது. என்றாலும், இந்த விவாதத்தாலும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இருவர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டமையாலும், இடதுசாரிகளின் ஆதரவையும் இழந்ததாலும், அரசாங்கத்துக்கு பெரிய இழுக்காகும்.

### இடைத் தேர்தல்கள்

கைலஞ்சக் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட இரு சுதந்திரக்கட்சி எம். பிக்கள் சபையிலிருந்து நீக்கப்பட்டதாலும், மாத்தளை யு. என். பி. மெம்பர் அலுவிகாராவின் மரணத்தாலும் 3 தொகுதிகளில் இடைத் தேர்தல் நடைபெறுகிறது. அரசாங்கத்துக்கு இந்த இடைத் தேர்தல்கள் மிக முக்கியமானதால், பிரதமர் சிறிமாவோ, தமது ரஷ்ய விஜயத்தையும் ஒத்திப்போட்டுவிட்டார்.

மார்ச்சு மாதம் 4ந் திகதி இலங்கையிலிருந்து கெய்ரோ மார்க்கமாக லண்டன் செல்லும் பிரதமர் மார்ச்சு 22ந் திகதி இலங்கை திரும்புகிறார். காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு முடிந்ததும் அவர் நேரே இலங்கை வந்து, இடைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார். நிதிமந்திரியும் பிரதமருடன் லண்டன் சென்று, அங்கிருந்து ரஷ்யாவுக்குப் போய் பொருளாதாரப் பேச்சுகளை நடத்துவாரென்று தெரிகிறது.

இம்முறை கம்யூனிஸ்ட் அபேட்சகரும் அரசாங்கக் கட்சி அபேட்சகருக்கு எதிராகப் போட்டியிடுவதால், கூட்டு முன்னணி இராதென்றும், இதனல் சுதந்திரக் கட்சிக்கு வெற்றி கிடைப்பது சந்தேகமென்றும் சொல்லப்படுகின்றது.

# 'கிவு, ஓரியண்டலில் பிரவேசிக்கும் பெல்ஜியர்களை சுட்டுக் கொல்க!'

## ஐ. நா. துருப்புக்களுக்கு ராஜேஸ்வர தயாள் உத்தரவு

லண்டன்

**கிவு, ஓரியண்டல் மாகாணத்திற்குள் பிரவேசிக்கும் பெல்ஜியர் அனைவரையும் சுட்டுக் கொல்லும்படி காங்கோவிலுள்ள ஐ. நா. விசேஷப் பிரதிநிதி திரு. இராஜேஸ்வர தயாள் ஐ. நா. படைக்கு உத்தரவிட்டிருக்கிறார்.**

அடுத்தாற்போல் உள்ளதும் காலஞ் சென்ற பிரதமர் லுமும்பாவுக்கு ஆதரவானதுமான குறித்த மாகாணங்களை தாக்க, ருவண்டா - உருண்டியிலிருந்து பெல்ஜிய பாரசூட் துருப்புக்கள் முஸ்தீபு செய்து வருவதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து திரு. தயாள் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். திரு. தயாளின் உத்தரவு, மேஜர் ஜெனரல் மொபுட்டுவுக்குத் தெரியப்படுத்தியபின், கிவுசே, அவர் நடத்தவிருந்த படையெடுப்பைக் கைவிட்டுவிட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

லுமும்பா கொல்லப்பட்டதை அடுத்து, கிவு மாகாணத்தில் மிகவும் பதட்டமான நிலை காணப்படுகிறதாம். அங்குள்ள பெல்ஜியர்களின் உயிருக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

### சடலங்கள்

காலஞ் சென்ற பிரதமரினதும், அவரது சகாக்கள் இருவரினதும் சடலங்களை அவர்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும்படியும் திரு. தயாள் கலவுபு அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்.

### பாதுகாப்புச் சபை

நேற்று ஐ. நா. பந்தோபஸ்து சபையில் அங்கத்தினர்களாய் இல்லாத 20 பேர் விவாதத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டதாயும், குறித்த விவாதத்தில் கலந்து கொள்ள இவர்கள் விருப்பம் தெரிவித்ததாயும் ஒரு செய்தி கூறுகிறது ஈக்வடோர், கினி, கியூபா ஆகிய நாடுகளும் விவாதத்தில் கலந்து கொண்டன.

ஐ. நா. பொதுக் காரியதரிசிக்கு மாலிபெடரேஷன் பிரதமர் அனுப்பியுள்ள ஒரு தந்தியில் கலவுபு, மோபுடு, ஷோம்பே ஆகியோரைக் கொலைக் குற்றவாளிகளாக்கித் தண்டிக்க வேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

### கிருஷ்ணமேனன் கருத்து

காங்கோவின் சுதந்திரத்துக்குப் போராடிய ஒரே ஒரு தேசியத் தலைவர் லுமும்பா தான் என்றும், இப்போது காங்கோ மக்கள் சுதந்திரத்தின் விலையாக லுமும்பாவை இழந்துவிட்டார்கள் என்றும் இந்தியத் தற்காப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் கூறினார். கலவுபு கோஷ்டியினர் ஆபிரிக்க எழுச்சியின் சின்னமான ஒரு தலைவரை இந்த நிலையில் படுகொலை செய்திருப்பது சர்வதேசக் குற்றம் என்றும், அவர்களை விசாரணை செய்ய வேண்டும் என்றும் மேலும் அவர் கூறினார். காங்கோ விஷயத்திலோ, அல்லது வேறு விஷயங்களிலோ பாரதம், தம் சர்வதேசக் கடமைகளை எவருக்கும் அச்சமின்றி நிறைவேற்றும் என்றும் மேனன் கூறினார்.

### ஆயிரக்கணக்கான தந்திகள்

காங்கோவில் ஐ. நா. நடந்து கொண்ட விதத்தைக் கண்டித்தும், லுமும்பா கொல்லப்பட்டதை அடுத்தும் பல்லாயிரக் கணக்கான தந்திகள் ஐ. நா. பொதுக் காரியதரிசிக்கு உலகம் முழுவதுமிருந்து அனுப்பப்பட்டு வருவதாயும், ஐ. நா. வாஜெலி காரியாலய அதிகாரி இந்தத் தந்திகளைக் கையாள அதிக நேரத்தைச் செலவிட்டு வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.


### மேலும் பல நாடுகள் ஆதரவு

திரு. கிஸாங்காவின் தலைமையிலுள்ள ஸ்டான்லிவில்லி அரசாங்கத்தை மொராக்கோ இந்தோனேஷியா, கியூபா ஆகிய நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன, அல்ஜீரிய தற்காலிக அரசாங்கமும் கிஸாங்கா அரசாங்கத்தைக் கௌரவித்துள்ளது. யூகோஸ்லேவியா, கானா, கினியா, மாலி, செக்கோஸ்லோவேகியா, மங்கோலியா, ருமேனியா, ஆகிய நாடுகளும் கிஸாங்கா அரசாங்கத்தை அங்கீகரித்துள்ளன.

### நீலிக் கண்ணீர்

ஜனாதிபதி கலவுபு நியமித்த புதிய காங்கோ மந்திரி சபைத் தலைவர் திரு. இலியோ, லுமும்பாவுக்கு ஏற்பட்ட பரிதாப முடிவு சோகத்திற்கிடமானது எனக் கூறினார்

ஆபிரிக்காவிலிருந்து அன்னிய படைகளை அகற்றும் கினி, கானா, மாலியின் முயற்சிகளுக்கு ரஷ்யா ஆதரவளிக்கும் என சோவியத் ஜனாதிபதி திரு. பிரஸ்னேவ் வாக்களித்திருக்கிறார்.



பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்துக்கு, இந்திய ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திரபிரசாத் சந்தன மரத்தினாலும், தந்தத்தினாலும் சித்திர வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்ட மகாபாரதக் காட்சி ஒன்றைப் பரிசளித்தார். கிருஷ்ண பகவான் தேரோட்டிச் செல்லும் சம்பவம் அதில் அற்புதமாக அமைந்துள்ளது. ராஷ்டிரபதி பவனத்தில் நடைபெற்ற பரிசளிப்பின்போது உப ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன், மகாராணி, ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திரபிரஸாத் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# காங்கோ பற்றிய இலங்கைத் தீர்மானம்

## ஆசிய-ஆபிரிக்க ஆதரவு தேடப்படும்

கொழும்பு

குழப்பநிலையிலுள்ள காங்கோவில் அமைதியை ஏற்படுத்து முகமாகப் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரவிருக்கும் ஒரு தீர்மானத்திற்கு இதர ஆசிய ஆபிரிக்க நாடுகளின் ஆதரவை இலங்கை கோரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கியநாடுகளின் ஆதரவில் சர்வதேசக்கமிஷன் ஒன்று காலஞ்சென்ற பிரதமமந்திரியினதும், அவர் சகாக்களினதும் மரணம் பற்றி விசாரணை நடத்த வேண்டுமெனக்கோரும் ஒரு தீர்மானத்திற்கு ஆசிய ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைக் கோரும்படி ஐ. நா. விலுள்ள விசேஷ இலங்கைப் பிரதிநிதி திரு. டி. பி. சுபசிங்காவுக்கு உத்தரவிடப்பெற்றுள்ளது.

வெளிநாடுகள் காங்கோவிற்குள் தலையிடுசெய்வதைத் தவிர்க்குமாறும், காங்கோ பார்லிமெண்டைக் கூட்டுமாறும் இத்தீர்மானம்வலியுறுத்துமாம்.

# ராஜினமாச் செய்ய ஹமர்ஷீல்ட் மறுப்பு

ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசி பதவியைத் தாம் ராஜினமாச் செய்யப்போவதில்லையென்று திரு. டாக் ஹமர்ஷீல்ட் பாதுகாப்புசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இச்சமயத்தில் தனது பதவியை ராஜினமாச் செய்வது ஸ்தாபனத்தை எக்கச்சக்கமான நிலையில் கொண்டுபோய் விடும் என்று திரு. ஹமர்ஷீல்ட் கூறினார்.

காங்கோ பிரதமர் லுமும்பா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து திரு. ஹமர்ஷீல்ட் ராஜினமாச் செய்யவேண்டுமென சோவியத் பிரதிநிதி கூறியதற்குப் பதிலளிக்கையிலேயே திரு. ஹமர்ஷீல்ட் தெரிவித்தார். லுமும்பாவும் மற்றுமிருவரும் கொலை செய்யப்பட்டதற்கு திரு. ஹமர்ஷீல்ட் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துக்கொண்டார்.

திரு. ஹமர்ஷீல்ட் பேச ஆரம்பித்ததும் சோவியத் பிரதிநிதி சபையிலிருந்து வெளியேறினார்.

திரு. ஹமர்ஷீல்ட் தமக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று கூறிய யோசனையையும் லுமும்பா கொலை பற்றி சர்வதேச விசாரணை நடைபெறவேண்டுமென்று கூறிய கருத்தையும் அமெரிக்கப் பிரதிநிதி திரு. அட்லாய் ஸ்டீவன்சன் ஆதரித்தார்.

காங்கோவில் நிலைமை ஸ்திரமடைந்ததும் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டதும் காங்கோ பார்லிமெண்டைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று திரு. ஸ்டீவன்சன் கூறினார்.

திரு. ஸ்டீவன்சன் கூறியவைகளில் எதுவும் காங்கோ நிலைமைக்குப் பரிகாரம் காணமாட்டாதென்று ரஷ்யப் பிரதிநிதி ஸோரின் கூறினார்.

பெல்ஜியம் பிரதிநிதியும் லுமும்பாவின் கொலைக்கு துக்கம் தெரிவித்துக்கொண்டார். லுமும்பாவின் கொலைக்கு தங்கள்மீது அனாவசியமாகப் பழி சுமத்தப்படுகிறதென்றும் அவர் கூறினார்.

### ராணுவ நோக்கமா?

லண்டன்

சுக்கிரனுக்கு ரஷ்யா பிரமாண்டமானதோர் ராக்கட்டை அனுப்பியதில் ஏதாவது ராணுவ நோக்கம் இருக்க முடியுமாவென்று விஞ்ஞானிகள் யோசித்துவருகின்றனர்.

பூமிக்கு மேலிருந்து ராக்கட்டை செலுத்திய உப கிரகம் பூமியை நோக்கி செலுத்த முடியுமாவென்று அவர்கள் ஆராய்கின்றனர்.

'டெய்லி மெயில்' பத்திரிகை இதுபற்றி எழுதுகையில் வானத்தில் முதல் பீரங்கி தோன்றக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது.

### சைப்பிரஸ்

லண்டன்

சைப்பிரஸ் 5 வருடங்கள் காமன்வெல்த்தில் அங்கத்துவம் வகிக்க விருப்புவதாயும் எதிர்வரும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் இவ் விஷயத்தை அது பிரஸ்தாபிக்குமென்றும் அறிவிக்கப்பட்டது

### ரஷ்யா-யு. எஸ். போர் மூண்டால்......

"ரஷ்யாவுடன் அமெரிக்கா போர் தொடங்குமானால், அதனால் அமெரிக்காவுக்கு எவ்வித பயனும் இருக்காது. ஏனெனில் ரஷ்யாவின் ராக்கெட்டுகள் எங்கெங்கு இருக்கிறதென அமெரிக்காவுக்குத் தெரியாது" என அமெரிக்கக் கடற்படைத் தலைவர் அட்மிரல் பேர்க் கூறினார். "ஆனால் அமெரிக்காமீது ரஷ்யா வலுத்தாக்குதலில் ஈடுபட்டால் அமெரிக்கா வெற்றியடையும். ஒரே சமயத்தில் 50 அல்லது 60 அணுக்குண்டுகளைத் தூக்கிச்செல்லும் ஏவாயுதங்கள் எங்களிடம் இருக்கின்றன" என்றும் அவர் குறிப்பிட்டார்.


வெளிவந்துவிட்டது. விற்பனையாகிறது!!

**கம்பராமாயணம் - சுந்தரகாண்டம்**

[ G. C. E. பரீட்சைக்குரியது ]

காட்சிப்படலம் 1—77 செய்யுட்கள்
நிந்தனைப்படலம் 1—82 செய்யுட்கள்

உரையாசிரியர்கள்:
வித்துவான் இராஜ. சிவ. சாம்பசிவசர்மா அவர்கள்
இ. பொன்னம்பலம் B. A., அவர்கள்

பதவுரை, பொழிப்புரை, குறிப்புரை, விளக்கம், செய்யுள் நயம், எழுவாய் பயனிலை, உபமான உபமேயங்கள், மேற்கோள் குறிப்புகள், இலக்கணக் குறிப்புகள் முதலிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய இலகுவான இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றது.

350 பக்கங்கள் விலை ரூ. 3-50

**கலைவாணி புத்தக நிலையம்**
யாழ்ப்பாணம் - கண்டி

# சீன - இந்திய எல்லைத் தகராறு

## இந்திய கொள்கைக்குப் பாராட்டு

புதுடில்லி

இந்திய பார்லிமெண்டின் வரவு செலவுத்திட்ட கூட்டத் தொடரை துலக்கி வைத்து ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் நிகழ்த்திய பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதம் லோக் சபையில் ஆரம்பமாகியது.

சீன—இந்திய எல்லைத் தகராறுகள் சம்பந்தமாக சீன அரசாங்கம் கொண்டிருக்கும் தன்னிச்சையான போக்கை பல அங்கத்தினர்கள் கண்டித்துப் பேசினார்கள்.

சீன—இந்திய எல்லைத் தகராறில் இந்திய கடைப்பிடிக்கும் கொள்கையைப் பல அங்கத்தினர்கள் ஆதரித்துப் பேசினார்கள்.

சமாதானத்தைக் குறிக்கோளாகக்கொண்டு பாரதநாடு தனது வெளிநாட்டுக் கொள்கையை அமைத்திருப்பது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் சில முக்கிய பிரச்சினைகளில் உறுதியுடனும், நிலை தளர்ந்து போகாமலும் காரியமாற்ற வேண்டியது இந்திய அரசாங்கத்தின் பொறுப்பாகுமென்று ஒருவர் பேசுகையில் வலியுறுத்தினார்.

நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

## இந்தியாவில் உளவறிந்தவர்

### உள்நாட்டுமந்திரிதகவல்

புதுடில்லி

உளவறிந்ததாக எட்டுப் பேர் புதுடில்லியில் கைது செய்யப்பட்டனரென்று இந்திய உள்நாட்டு மந்திரி பண்டிட் பந்த் ராஜ்ய சபாவில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

இவர்களில் நால்வரைத் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மீது தற்போது வழக்குத் தொடர உத்தேசமில்லையென்றும் பண்டிட்பந்த் கூறினார். மற்ற நால்வர் சம்பந்தமாக இன்றும் விசாரணை நடைபெற்றுவருவதாக அவர் கூறினார்.

சில தூதராலயங்களைச் சேர்ந்தவர்களும் இதில் சம்பந்தப்பட்டிருந்தாலும் இவர்கள் சிரேஷ்ட அதிகாரிகளல்லவென்றும் இவர்கள் யாவரும் இந்தியாவிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டுவிட்டனரென்றும் திரு. பந்த் கூறினார்.

## ஆசிய—ஆபிரிக்க நாடுகளுக்கு

### டிட்டோ செய்தி

நியுயோர்க்

பாதுகாப்புச் சபை தொடர்ந்து காங்கோ நிலைமை பற்றி பரிசீலனை செய்து வருகிறது. அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு நூற்றுக்கணக்கான நியுயோர்க் பொலிசார் சபையைச் சுற்றிக் காவல் புரிந்து வருகிறார்கள். நேற்றைய விவாதத்தில் ஐ. நா. பொதுக் காரியதரிசி ராஜினாமாச் செய்ய வேண்டுமென போலந்து வற்புறுத்தியது.

லுமும்பாவின் ஆதரவு மாகாணங்களான கிவு, ஓரியண்டேல், கஸாய் ஆகிய இடங்களில் கலவரநிலை உச்சமடைந்திருப்பதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

காங்கோவில் ஐக்கிய நாட்டின் நிலையைப்பலப்படுத்துமுகமாக அமெரிக்கா பல நாடுகளுடன் ஆலோசனை நடத்தி வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

யூகோஸ்லேவிய ஜனாதிபதி டிட்டோ 18 ஆசிய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பிவைத்திருக்கிறாரென்றும், அது காங்கோவைப் பற்றியதாகவே இருக்கலாமென்றும் கூறப்படுகிறது.

---

## இரு உயிர்களை மீட்டனர்

சேலம்

ஆத்தூரிலுள்ள கிணறொன்றில் ஒரு பெண்ணும் குழந்தையும் தவறுதலாக விழுந்துவிட்டனர். அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் கூக்குரல் கேட்டு அங்குசென்ற மணி, ஆறுமுகம் ஆகிய இரு இளைஞர்களும் உடனடியாக கிணற்றில் குதித்து அந்தப் பெண்ணையும் குழந்தையையும் காப்பாற்றினர். அந்த இளைஞர்களை அங்கு கூடிநின்ற ஜனங்கள் வெகுவாகப் பாராட்டினர்.

## அருந்ததியர் சங்க கோரிக்கை

### உள்நாட்டு அமைச்சு சம்மதம்

கொழும்பு

கள்ளுத் தவறணைகளுக்குப் பெண்களும் குழந்தைகளும் செல்வதைத் தடுப்பதற்குச் சட்டம் இயற்றவேண்டுமென்று அகில இலங்கை அருந்ததியர் சங்கம் உள்நாட்டு மந்திரியைக் கேட்டிருந்தது.

புதிய சட்டம் இயற்றவேண்டிய அவசியமில்லையென்றும் பெண்கள் தவறணைகளுக்கு வெளியே நிற்பதைத் தடை செய்யக்கூடிய சட்டம் ஏற்கனவே இருப்பதாகவும் இதை அமுலுக்குக் கொண்டு வருவது பற்றிஆலோசித்து நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிபரைத் தாம்கேட்டிருப்பதாகவும் உள்நாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி அருந்ததியர் சங்கத்திற்குத் தெரிவித்துள்ளார்.

---

## கடற்படை அதிகாரி தலைமையில் மலைஏறும் கோஷ்டி

காட்மாண்டு

அன்பூரணா என்ற மலைத் தொடரின் மூன்றாவது சிகரத்தின்மீது இந்தியக் கடற்படையைச் சேர்ந்த லெட்டினண்டை எம். எஸ். கோக்லி என்பவரின் தலைமையில் ஒரு கோஷ்டி ஏறத் திட்டமிட்டிருக்கிறது.

24,800 அடி உயரமுள்ள இந்தச் சிகரத்தின்மீது எதிர்வரும் வசந்தகாலத்தில் இந்தக் கோஷ்டி ஏறத்தொடங்குமென்று தெரிகிறது.

---

## மேதினம்

மன்னார்

மேதினக் கொண்டாட்டத்தைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று மன்னார்மாவட்ட மோட்டார் லொறிச் சாரதிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. திருவால்டர் குரூஸ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

# கல்விக் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்த தயாராகுக!

## கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் ஆலோசனை

கொழும்பு

தேசியக் கல்விக் கமிஷன் சிபார்சுகள் வெளியாகியவுடன் அதை அமுல் நடத்தக் கல்வி இலாகா தயாராவதுடன், கல்வி அமைப்பு முழுவதையுமே உடனடியாக வரிசைப்படுத்தலாமெனத் தாம் நம்புவதாயும் கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் கல்வி அதிகாரிகளிடையே பேசும்போது கூறினார்.

"கல்வி இலாகாவிலுள்ள பல்வேறு பகுதிகள் எவ்விதம் சிறந்த முறையில் வேலை செய்ய வேண்டுமென்பதைப் பரிசீலனை செய்யுமுமாக அநேக கமிட்டிகளை நான் நியமிக்கவிருக்கிறேன். இதனால் பிள்ளைகளும், பெற்றோரும் ஆசிரியர்களும் அதிக பயன் அடைவார்கள். கல்வி அதிகாரிகளுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்குவதன் மூலம் சிறிய விஷயங்களுக்கெல்லாம் தலைமைக் காரியாலய அனுமதி பெற அவசியமில்லாமல் செய்ய வேண்டுமென்பதே எனது நோக்கம்.

பாடசாலைப் பரிசோதகர்களுக்கும் அதிக பொறுப்புக்களை வழங்க வேண்டும். பல்வேறு கல்விப் பிரச்சினை சம்பந்தமாகப் பாடசாலை அதிபர்களுக்கு அவர்கள் ஆலோசனை கூறும்படி கேட்கப்படுவார்கள். கல்வி இலாகாவின் ஒவ்வொரு அதிகாரியும் பழைய முறையான சிந்தனையை மேற்கொள்ளாமல் முன்னேற்றகரமான முறையில் சிந்திக்க வேண்டும். நாட்டின் எதிர்காலம் குழந்தைகளின் கையிலேயே இருப்பதால், ஒவ்வொரு கல்வி அதிகாரியும் அவர்கள் சரியான பாதையில் அழைத்துச் செல்லப்படுகிறார்களா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்" எனவும் கல்வி மந்திரி கூறினார்.

## காமன்வெல்தில் தென்னாபிரிக்கா

லண்டன்

தென்னாபிரிக்கா குடியரசாகிவிட்டதால் அதைத் தொடர்ந்து காமன்வெல்த் அமைப்பில் அங்கம் வகித்துவர அனுமதிப்பதா என்பதுபற்றி லண்டனில் கூடவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் விசேஷமாக ஆராயப்படும் என்று தெரிகிறது.

தென்னாபிரிக்கா பற்றிய விவாதத்துக்கு பிரதமர்கள் மகாநாடு அதிக முக்கியத்துவம் கொடுக்குமென்று தெரிகிறது.

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு மார்ச் 8-ம் திகதி நடைபெறவிருக்கிறது. தென்னாபிரிக்கப் பிரதம மந்திரி டாக்டர் ஹென்றிவெர்வூட் நேரடியாக மகாநாட்டில் கலந்து கொள்வார். தென்னாபிரிக்கா உட்பட 12 நாடுகள் மகாநாட்டில் கலந்து கொள்ளும்.

இந்த மகாநாட்டில் முதன் முதலாக ஒரு பெண் பிரதம மந்திரியான திருமதி பண்டாரநாயக்கா கலந்து கொள்வார்.

---

## குடித்துவிட்டு தெருவில் அட்டகாசம்

ஹபரதுவ

மது அருந்திவிட்டு தெருவில் அட்டகாசம் புரிந்ததாகக் கருதப்படும் ஒருவரைப் பொலிசார் தேடுகின்றனர்.

அவர் ஒரு வீட்டில் நுழைந்து கதவுகளை உடைத்து விட்டு பக்கத்திலிருந்த டாக்டர் வீட்டில் புகுந்து கண்ணாடி அலமாரிகளை நொறுக்கியதாகவும் இன்னொருவர், வீட்டில் நுழைந்து தீமூட்டப்போவதாகப் பயமுறுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. ஆசாமி தலைமறைவாகவே இருந்துவருகிறார். பொலிசார் தேடுகின்றனர்.

---

## 4 குழந்தைகளைப் பெற்றெடுத்தார்

டோக்கியோ

ஜப்பானில் 26 வயதான ஒரு பெண்மணி நான்கு குழந்தைகளைப் பிரசவித்திருக்கிறார். அந் நான்கு குழந்தைகளும் ஆண்கள். குழந்தைகளும் தாயும் சௌக்கியமாக இருக்கிறார்கள்.

---

## அமெரிக்காவின் ஆட்சேபம்

வாஷிங்டன்

மொரக்கோவுக்கு ரஷ்ய ஆயுதங்கள் கிடைத்து வருவது பற்றி அமெரிக்கா ஆட்சேபம் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

மொரக்கோ படைகளுக்கு ரஷ்யா 14 போர் விமானங்கள் கொடுத்ததை அமெரிக்கா சம்பிரதாயபூர்வமாக ஆட்சேபித்திருக்கிறது என்று கருதப்படுகிறது.

---

## ரூ 125 அபராதம்

மன்னார்

சட்டவிரோதமாகச் சராயம் விற்றதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மன்னார் நீதவான் திரு ரி. ஜே. இராசரத்தினம் சூரியகாட்டைச் சேர்ந்த ஈ. ஆண்டி இரத்தினத்திற்கு 125 ரூபாய் அபராதம் விதித்தார்.




ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு

# சீனிக்குப் பதில் பனங்கட்டி; சிகரட் வேண்டாம் சுருட்டு

## உள்நாட்டுப் பணம் வெளியேருமல் தடுக்க யோசனை

**எங்கள் நாட்டில் என்ன இருக்கிறது? என்று கேட்பவர்களுக்கு சுருக்கமாகவும் விளக்கமாகவும் பதில் தருகிருர் சுதேசப் பொருள் இயக்கத் தொண்டன்.**

**உள்நாட்டுப் பணம் வெளியேருமல் தடுப்பதற்கு சிறந்த யோசனைகளையும் அவர் இங்கு தெரிவித்துள்ளார்.**

நம்நாடு முன்னேறுவதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மால் இயன்றதைச் செய்தல்வேண்டும். பண வசதியுள்ளவர்கள் சமூக முன்னேற்ற இயக்கங்களையும், பொருளாதார முன்னேற்ற இயக்கங்களையும் தொடங்கி நடத்தலாம் அல்லது அத்தகைய இயக்கங்களுக்குப் பண உதவி செய்தும் வேறு பல வழிகளில் உழைத்தும் தம்மாலான தொண்டைச் செய்யலாம். பணவசதியில்லாதவர்கள் வேறு பல துறைகளில் உழைக்கலாம். நம் பிரதேசம், நம் சமூகம், நம் மொழியென்ற உணர்ச்சியைப்பெற்றுவிட்டால் இத்தகைய தொண்டுகளில் நாமாகவே ஈடுபடுவோமல்லவா?

### பிறதேசப் பொருள்

நம்பிரதேச முன்னேற்றத்தின் பொருட்டு நாம் ஒவ்வொருவரும் பங்குகொள்ளக்கூடிய வழிகள் பலவுள. அவற்றுள் ஒன்று அப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை ஆதரிப்பது. இப்பொருள்கள் வெளிநாட்டுப் பொருள்களிலும்பார்க்கச் சிறிது விலை கூடியனவாயிருப்பினும் தரத்திற் குறைந்தனவாயினும் நம் பிரதேசப் பொருள்களையே உபயோகிக்கிறேம். நம் பணம் எம் பிரதேசத்திலுள்ள மக்களையே சென்றடைகிறது என்ற உணர்ச்சியை நாம் பெற்றுவிட்டோமென்ருல் எமக்கு எவ்வளவு மனத்திருப்தியுண்டாகும். இந்த உணர்ச்சியையே காந்தியடிகள் இந்திய மக்களுக்கு ஊட்டிச் சுதேசப் பொருள்களை ஆதரிக்கச் செய்து ஒவ்வொருவர் உள்ளத்திலும் சுதேச உணர்ச்சியையும் சுதந்திரதாகத்தையும் வளரச் செய்தார். ஏழைகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுத்தார். நாம் ஒவ்வொருவரும் நம் பிரதேசப் பொருள்களை ஆதரிப்போமாயின் பொருள்களின் உற்பத்தி பெருகும். விலைகள் குறையும், தரமும் உயரும்.

### சிக்கன வாழ்க்கை

நாம் ஒவ்வொருவரும் இயன்றளவு சிக்கனமாக வாழப் பழக வேண்டும். சிகரெட் புகைப்பவர்கள் அப்பழக்கத்தை நிறுத்த முயற்சி செய்யலாம். நிறுத்தக்கூடிய மனப்பலமில்லாதவர்கள் நம்பிரதேசத்திற் செய்யப்படும் சுருட்டை உபயோகிக்கலாம். சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் அநேகர். புகையிலைப் பயிர்ச்செய்கை மூலம் சீவனத்தை நடத்துவோர் ஆயிரக்கணக்கானேர். சிகரெட்டுக்குக் கொடுத்துப் பிறர் கையிற் சேரும் பணம் அவ்வளவும் நாம் சுருட்டை வாங்குவதன்மூலம் நம் பிரதேசத்திலுள்ள தொழிலாளர்களிடம் போய்ச்சேருமாயின் மேலும் மேலும் ஆயிரக்கணக்கானேருக்கு வேலைவசதி கிடைக்குமல்லவா? அதனல் எமக்கு எத்துணை இன்பமுண்டாகும்.

### உள்நாட்டுச் சேலை

எம்பிரதேசத்தில் செய்யப்படும் சேலைகளை நாம் எல்லோரும் வாங்குவோமாயின் எம் பணம் வெளிநாட்டுக்குச் செல்லாது. நம்பிரதேசத்தில் இக்கைத்தொழில் பெருகி ஆயிரக்கணக்கானேரின் சீவியத்துக்கு வழிவகுக்குமல்லவா? இனிமேல் இவற்றையே வாங்குவோமென நாம் உறுதி பூண்டுவிட்டால் அவற்றின் விலை குறைவதோடு தரமும் உயரும். ஒவ்வொரு ஊரிலும் இக்கைத்தொழிலை மக்கள் தொடங்கி ஓய்வு நேரத்தைத் தக்க துறையிற் பயன்படுத்துவதோடு ஊதியமும் பெறுவார்களல்லவா?



அமெரிக்கப் புதிய ஜனதிபதி கெனடி பதவி ஏற்றபோது வெள்ளை மாளிகைக்குமுன் நடைபெற்ற அணிவகுப்பு ஊர்வலம் நகர்ந்து செல்லுகையில் கரகோஷம் புரிவதைப் படத்தில் காணலாம். அவருக்கு இடது புறத்தில் ஸ்ரீமதி கெனடியும், வலப்புறத்தில் உதவி ஜனதிபதி லிண்டன் பி. ஜோன்ஸனும் நிற்கின்றனர்.

சீனி உபயோகிப்பதைக் குறைத்துப் பனங்கட்டியைப் பயன்படுத்தலாம். பனங்கட்டியை நாம் பெருமளவில் உபயோகிப்போமாயின் எம் பணம் இப்பிரதேசத்துக்குப் போய்ச் சேருவதோடு மேலும் பலர் இத்தொழிலில் ஈடுபட்டுப் பலனடைவார்களல்லவா? பனங்கட்டி செய்யும் முறையிலும் முன்னேற்றமுண்டாகும்.

### தோற் பொருள்

நம்பிரதேசத்தில் சிறந்த முறையில் சப்பாத்து, செருப்பு முதலிய தோற்பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதைச் சிலர் அறியாமலிருக்கலாம். இனிமேல் இப்பொருள்களையே வாங்குவோமென ஒரு தீர்மானம் செய்துவிட்டோமாயின், இத்தொழில் இன்னும் எத்தனை ஆயிரம் மக்களுக்கு வேலை கொடுக்கும்? வெளிநாட்டுப் பற்பசைகளை விடுத்து வேப்பங்குச்சு, ஆலம்விழுது, உப்பும் பாக்குக்கரியும் சேர்ந்த பற்பொடி முதலியவற்றை உபயோகிக்கலாம். தலைக்கு வைப்பதற்கு நல்லெண்ணெயை உபயோகித்தல் வேண்டும். வெளிநாட்டிலிருந்துவரும் கிறீம்களை வாங்கி எம்பணத்தை வெளியேற்றுவதா? நல்லெண்ணெய் சுகத்துக்குச் சிறந்தது என்பதும் அதை உணவுடன் சேர்த்துக்கொள்வோர் திடகாத்திர தேகமுடையவராயிருக்கின்றனர் என்பதும் நாம் அறிந்ததே

## இணையற்ற 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | வெம்பிளி (கண்டி)

மற்றும் பத்துத் திரைகளில்

★ எண்ணற்ற இரசிகர்களின் இதயத்தை ஈர்த்த இன்பக்காவியம்!

★ தாய் அன்பிற்கு இணையாக தரணியில் எதுவும் கிடையாது என்பதை சித்தரிக்கும் இலட்சிய ஓவியம்!!

தென்னிந்தியாவில் 100-வது தினத்தை வெற்றியோடு கொண்டாடிய போதும் இன்னும் இரசிகர் கூட்டம் பெருகி எங்கு பார்த்தாலும் "கைராசி"யின் கதையாகவே இருக்கிறது!


உண்மையை அறிய இன்றே பாருங்கள்!

முகராசியுள்ள **ஜெமினி கணேசன்** எழில்ராசியுள்ள **பி. சரோஜாதேவி**

மற்றும்



சகஸ்ரநாமம்
எம். வி. ராஜம்மா
எம். ஆர். ராதா
கே. மாலதி
தங்கவேலு
மோகன
கே. டி. சந்தானம்
நடித்த



வாசு பிலிம்ஸ்

# கைராசி

டைரக்ஷன்: **கே. சங்கர்**

இசை அமைப்பு: **ஆர். கோவர்த்தனம்**

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.